(எட்டாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 12.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2020 பெப்ரவரி 18, செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணிக்கு

## சமுகமளித்தோர்:

**கௌரவ கரு ஜயசூரிய,** சபாநாயகர்

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ மஹிந்த ராஜபக்ஷ,** பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர், புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** போக்குவரத்து சேவைகள் முகாமைத்துவ அமைச்சர் மற்றும் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்

**கௌரவ டலஸ் அழகப்பெரும,** கல்வி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்

**கௌரவ தினேஷ் குணவர்தன,** வெளிநாட்டு உறவுகள் அமைச்சர், திறன்கள் அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** தகவல் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மற்றும் உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர்

**கௌரவ ஜனக பண்டார தென்னகோன்,** பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ ஆறுமுகன் தொண்டமான்,** சமுதாய வலுவூட்டல்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து,** வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு மேம்பாடு அமைச்சர் மற்றும் சுற்றுலா மற்றும் விமானச் சேவைகள் அமைச்சர்

**கௌரவ சமல் ராஜபக்ஷ,** மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) பவித்திராதேவி வன்னிஆரச்சி,** மகளீர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சர்

**கௌரவ விமல் வீரவங்ச,** சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்துறை மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் மற்றும் கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன,** வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,** நீர்ப்பாசன மற்றும் கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லஸந்த அலகியவன்ன,** அரச முகாமைத்துவ மற்றும் கணக்கீட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே,** புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் மின்சக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தயாசிறி ஜயசேகர,** கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. திசாநாயக்க,** காணி மற்றும் காணி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார,** நீர்வழங்கல் வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,** சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அருந்திக்க பர்னாந்து,** சுற்றுலா மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,** சர்வதேச ஒத்துழைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தாரக்க பாலசூரிய,** சமூகப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா,** உள்ளக வர்த்தக மற்றும் பாவனையாளர் நலனோம்புகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிமல் லான்சா,** சமுதாய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ காமினி லொக்குகே,** நகர அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** ஏற்றுமதிக் கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விதுற விக்கிரமநாயக்க,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** தேயிலைக் கைத்தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ மஹிந்த சமரசிங்க,** பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ திலங்க சுமதிபால,** தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சர்

**கௌரவ செஹான் சேமசிங்க,** அபிவிருத்தி வங்கிகள் மற்றும் கடன் திட்டங்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,** வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கனக ஹேரத்,** துறைமுக அபிவிருத்தி அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ (திருமதி) தலதா அதுகோரல**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ வஜிர அபேவர்தன**

**கௌரவ அசோக் அபேசிங்க**

**கௌரவ ஜோன் அமரதுங்க**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே**

**கௌரவ வசந்த அலுவிஹாரே**

**கௌரவ (கலாநிதி) சீ.மு. முகம்மட் இஸ்மாயில்**

**கௌரவ ரீ. பீ. ஏக்கநாயக்க**

**கௌரவ கயந்த கருணாதிலக்க**

**கௌரவ ரவி கருணாநாயக்க**

**கௌரவ அகில விராஜ் காரியவசம்**

**கௌரவ பைஸால் காசிம்**

**கௌரவ லக்ஷமன் கிரிஎல்ல**

**கௌரவ அ. அரவிந்த் குமார்**

**கௌரவ வேலு குமார்**

**கௌரவ நாலக்க பிரசாத் கொலொன்னே**

**கௌரவ மனோ கணேசன்**

**கௌரவ சிறிபால கமலத்**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ எட்வட் குணசேகர**

**கௌரவ டி.வீ. சானக**

**கௌரவ சிசிர ஜயகொடி**

**கௌரவ மலித் ஜயதிலக**

**கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ**

**கௌரவ நலின் பண்டார ஜயமஹ**

**கௌரவ லக்கி ஜயவர்தன**

**கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன**

**கௌரவ பிரேமலால் ஜயசேகர**

**கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன**

**கௌரவ க. துரைரெட்ணசிங்கம்**

**கௌரவ பாலித குமார தெவரப்பெரும**

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா**

**கௌரவ அநுர திசாநாயக்க**

**கௌரவ நவின் திசாநாயக்க**

**கௌரவ மயந்த திசாநாயக்க**

**கௌரவ எச்.ஆர். சாரதீ துஷ்மந்த**

**கௌரவ முஹம்மது நசீர்**

**கௌரவ எஸ். பீ. நாவின்ன**

**கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்**

**கௌரவ கருணாரத்ன பரணவிதான**

**கௌரவ கே.கே. பியதாஸ**

**கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா**

**கௌரவ டிலான் பெரேரா**

**கௌரவ அஜித் பி. பெரேரா**

**கௌரவ லக்ஷமன் வசந்த பெரேரா**

**கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ ஹரின் பர்னாந்து**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே**

**கௌரவ அசோக்க பிரியந்த**

**கௌரவ ஏ. டி. பிரேமதாச**

**கௌரவ சஜித் பிரேமதாஸ,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ எஸ். பிரேமரத்ன**

**கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார**

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார**

**கௌரவ பாலித ரங்கே பண்டார**

**கௌரவ சாந்த பண்டார**

**கௌரவ றிஸாட் பதியுதீன்**

**கௌரவ தாராநாத் பஸ்நாயக்க**

**கௌரவ எஸ்.எம். மரிக்கார்**

**கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன்**

**கௌரவ அப்துல்லா மஹரூப்**

**கௌரவ அஜித் மான்னப்பெரும**

**கௌரவ திலக் மாரபன**

**கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க**

**கௌரவ பைஸர் முஸ்தபா**

**கௌரவ அர்ஜுன ரணதுங்க**

**கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க**

**கௌரவ பிரசன்ன ரணவீர**

**கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்**

கௌரவ சமன் ரத்னபிரிய

கௌரவ பிமல் ரத்நாயக்க

கௌரவ சாகல ரத்நாயக்க

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ நாமல் ராஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) விஜயதாஸ ராஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்

கௌரவ அங்கஜன் இராமநாதன்

கௌரவ ரன்ஜன் ராமநாயக்க

கௌரவ வருண லியனகே

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ ரணில் விக்கிரமசிங்க

கௌரவ ஏ.ஏ. விஜேதுங்க

கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன

கௌரவ (டாக்டர்) (திருமதி) துஷிதா விஜேமான்ன

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன

கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம

கௌரவ துலீப் விஜேசேகர

கௌரவ தேனுக விதானகமகே

கௌரவ ச. வியாழேந்திரன்

கௌரவ சந்திம வீரக்கொடி

கௌரவ குமார வெல்கம

கௌரவ சி. சிறீதரன்

கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்

கௌரவ மலிக் சமரவிக்ரம

கௌரவ மங்கள சமரவீர

கௌரவ ரவீந்திர சமரவீர

கௌரவ சந்தித் சமரசிங்க

கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்

கௌரவ ஈ. சரவணபவன்

கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்

கௌரவ முத்து சிவலிங்கம்

கௌரவ அமீர் அலி சிஹாப்தீன்

கௌரவ எம்.ஏ. சுமந்திரன்

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ லக்ஷமன் செனெவிரத்ன**

**கௌரவ சுஜீவ சேனசிங்க**

**கௌரவ மாவை சோ. சேனாதிராசா**

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன**

**கௌரவ சத்துர சந்தீப சேனாரத்ன**

**கௌரவ ரஊப் ஹகீம்**

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி**

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ டீ. பி. ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

**கௌரவ மனோஜ் ஹேவாகம்பலகே**

**கௌரவ ஏ. எச். எம். பௌஸி**

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. *சபாநாயகரின் அறிவித்தல்கள்:*** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தலை விடுத்தார்:—

"2020 சனவரி 21 ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ரஞ்சன் ராமநாயக்க அவர்களால் பாராளுமன்ற சபாபீடத்தில் உரையொன்று நிகழ்த்தப்பட்டது. அவ்வுரையின்போது தாம் குரல் ஒலிப்பதிவுகள் சிலவற்றினை சபையில் சமர்ப்பிப்பதாக தெரிவித்த போதும் அன்றைய தினம் அவ்வகையில் குரல் ஒலிப்பதிவுகள் எதுவும் சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேற்படி குரல் ஒலிப்பதிவுகள் சபையில் சமர்ப்பிக்கப்படவில்லையென அன்றைய தின ஹன்சாட் அறிக்கையின் 430 மற்றும் 437 நிரல்களில் மிகத் தெளிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் அதற்கு சில தினங்களுக்கு பிறகு அதாவது 2020 சனவரி 24 ஆம் திகதி மாலை அன்றைய தின பாராளுமன்ற அமர்வுகள் நிறைவடைந்ததன் பின்னர் கௌரவ உறுப்பினரால் 19 தொலைபேசி உரையாடல்கள் அடங்கிய குரல் ஒலிப்பதிவுகள் ஹன்சாட் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டன. அந்த சந்தர்ப்பத்தில் 21 ஆம் திகதிக்குரியதான ஹன்சாட் அறிக்கைகள் அச்சிடப்பட்டு இருந்தன. இவ்வாறு சபையில் சமர்ப்பிக்கப்பட்ட குரல் ஒலிப்பதிவுகளை உறுப்பினர்களுக்கு செவிமடுப்பதற்குப் பெற்றுத்தருமாறு உறுப்பினர்களால் பலத்த பல வேண்டுகோள்கள் முன்வைக்கப்பட்டன.

2020.02.07 ஆம் திகதி நடாத்தப்பட்ட பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுக் கூட்டத்தின் போது இவ்விடயம் தொடர்பில் நான் கட்சித் தலைவர்களை விழிப்புணர்வூட்டியதுடன், அதன்போது ஏற்படுத்திக் கொண்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் குறித்த குரல் ஒலி உள்ளடக்கத்தின் சில விடயங்கள் வகுத்துத் தொகுக்கப்பட்ட பின்னர் அவற்றை உறுப்பினர்களுக்கு வழங்குவது பொருத்தமானதாக இருக்கும் என கருதப்பட்டது. அதனடிப்படையில் மேற்படி குரல் ஒலிப்பதிவில் உள்ளடங்கியுள்ள பதிவுகள் தொடர்பில் அறிக்கையிடும் பொருட்டு நான்கு உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்று என்னால் நியமிக்கப்பட்டது.

பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற ஆவணங்கள் தொடர்பில் இந்த கௌரவ சபையினால் பேணப்பட்டு வருகின்ற ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறைகள் மற்றும் விதிகள் காணப்படுகின்றன. அக்கிராசனம் அனுமதி மற்றும் அங்கீகாரம் வழங்கினால் மாத்திரமே எந்தவோர் ஆவணத்தையும் அவ்வாறு சபையில் சமர்ப்பிக்க முடியும். சபையில் சமர்ப்பிக்கப்படும் ஆவணமானது உறுப்பினர் ஒருவர் ஆற்றிய உரையுடன் தொடர்புடையதாக இருத்தல் வேண்டும். சபையில் சமர்ப்பிக்க உத்தேசிக்கப்படும் ஆவணங்களை உரை நிறைவடைந்தவுடன் சபா பீடத்தில் வைத்தல் வேண்டும். அவ்வாறு சபையில் சமர்ப்பித்த ஆவணமொன்றை மீள வகுத்துத்தொகுத்தலானது பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையாக அமைவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

எவ்வாறாயினும் கௌரவ உறுப்பினர்களால் விடுக்கப்பட்ட பலத்த வேண்டுகோள் காரணமாகவும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டிற்கு அமைவாகவும் 19 உரையாடல்கள் அடங்கிய குரல்பதிவுகளை தொகுத்ததன் பின்னர் வெளியிடல் பொருத்தமானதாக இருக்கும் என தீர்மானிப்பதுடன், இத்தீர்மானமானது எதிர்காலத்தில் சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ள ஆவணங்கள் தொடர்பில் முன்மாதிரியாகக் கொள்ளப்படக் கூடாது என்பதனையும் அழுத்தமாகச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

பாராளுமன்றத்தினுள் அரசியலமைப்பினாலும் பாராளுமன்ற (சிறப்புரிமைகள் மற்றும் தத்துவங்கள்) பற்றிய சட்டத்தின் மூலமாகவும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கருத்து தெரிவிப்பதற்கான சுதந்திரத்தை அவர்கள் பொறுப்புடன் இக்கௌரவ சபையின் நன்மதிப்பையும் கௌரவத்தையும் பாதுகாக்கும் வகையில் பயன்படுத்துவார்கள் என நான் நம்புகின்றேன்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்காலத்தில் சபையில் ஆவணங்களை சமர்ப்பிக்கும் போது என்னால் மேலே குறிப்பிட்டுள்ளவாறு தமது பொறுப்பினை உரிய முறையில் நிறைவேற்றாவிடின், அவ்வாறாக சபையில் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களை நிராகரிக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதனை அறிவிக்க விரும்புகின்றேன்.''

**2. பத்திரங்கள் சமர்ப்பித்தல்:** (1) சபாநாயகர் —

(i) இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 41ஆ(6) உறுப்புரையின் மற்றும் 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 30 ஆம் வாசகத்தின் பிரகாரம், 2019 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுக்கான (2019.01.01 - 2019.03.31) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயலாற்றுகை அறிக்கை;

(ii) இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 41ஆ(6) மற்றும் 153ஏ உறுப்புரைகளின் பிரகாரம், 2019 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டிற்கான (2019.07.01 - 2019.09.30) கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் செயலாற்றுகை அறிக்கை;

(iii) இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 41ஆ(6) உறுப்புரையின் பிரகாரம், 2018 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டு (2018.01.01 - 2018.03.31) மற்றும் இரண்டாம் காலாண்டுக்கான

(2018.04.01 - 2018.06.30) தேசிய பெறுகை ஆணைக்குழுவின் முன்னேற்ற அறிக்கைகள்; மற்றும்

(iv) இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 41ஆ(6) மற்றும் 55 (5) உறுப்புரைகளின் பிரகாரம், 2019 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டிற்கான (2019.07.01 - 2019.09.30) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் முன்னேற்ற அறிக்கை

மேற்படி அறிக்கைகள் ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமென கட்டளையாயிற்று.

(2) வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர் —

(i) 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 51 ஆம் பிரிவின் கீழ் மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி தொடர்பில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2019 ஒக்டோபர் 31 ஆம் திகதிய 2147/72 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்;

(ii) 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 51 ஆம் பிரிவின் கீழ் மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி தொடர்பில் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2019 திசெம்பர் 14 ஆம் திகதிய 2153/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதி;

(iii) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 4, 13 மற்றும் 17 ஆம் பிரிவுகளின் கீழ், மதுவரி தொடர்பாக நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 செப்டெம்பர் 27 ஆம் திகதிய 2142/77 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் (மதுவரி அறிவித்தல் இலக்கம் 05/2019);

(iv) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 22 ஆம் பிரிவின் கீழ், மதுவரி தொடர்பாக நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 திசம்பர் 03 ஆம் திகதிய 2152/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் (மதுவரி அறிவித்தல் இலக்கம் 07/2019);

(v) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 12, 14 மற்றும் 22 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 32 ஆம் பிரிவின் கீழ், மதுவரி தொடர்பாக நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 திசம்பர் 03 ஆம் திகதிய 2152/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் (மதுவரி அறிவித்தல் இலக்கம் 08/2019); மற்றும்

(vi) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 22 ஆம் பிரிவின் கீழ், மதுவரி தொடர்பாக நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 திசம்பர் 03 ஆம் திகதிய 2152/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் (மதுவரி அறிவித்தல் இலக்கம் 09/2019)

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வொழுங்குவிதிகள் மற்றும் அறிவித்தல்களை, அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் 2019.06.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட எட்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடரின் மூன்றாவது அறிக்கையில் பாதுகாப்பு அமைச்சின் 2017 ஆம் ஆண்டின் செயலாற்றுகை தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) தகவல் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மற்றும் உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர் —

(i) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ ஆம் பிரிவின் கீழ் நஷனல் ஸ்கூல் ஒப் பிஸ்னஸ் மனேஜ்மன்ட் லிமிட்டெட்டை பட்டமளிக்கும் நிறுவகமாக அங்கீகரித்து உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 திசெம்பர் 30 ஆம் திகதிய 2156/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகள்; மற்றும்

(ii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ ஆம் பிரிவின் கீழ் எஸ். எல். ரி. கெம்பஸ் (பிறைவெற்) லிமிட்டெட், நாகானந்த இன்டநஷனல் இன்ஸ்டிடியூட் fபோர் புடிஸ்ட் ஸ்டடிஸ் (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் சினெக் கெம்பஸ் (பிறைவெட்) லிமிட்டெட் ஆகியவற்றை பட்டமளிக்கும் நிறுவகங்களாக அங்கீகரித்து உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 சனவரி 06 ஆம் திகதிய 2157/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகள்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அக்கட்டளைகள், கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு மேம்பாடு அமைச்சர் மற்றும் சுற்றுலா மற்றும் விமானச் சேவைகள் அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு மேம்பாடு அமைச்சர் மற்றும் சுற்றுலா மற்றும் விமானச் சேவைகள் அமைச்சர்—

(i) 2017 ஆம் ஆண்டுக்கான இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை; மற்றும்

(ii) 2017 ஆம் ஆண்டுக்கான சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் வருடாந்த அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகளை சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்**: (1) சட்டவாக்க நிலையியற் குழுவின் தவிசாளர் கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி "இலங்கை சுற்றாடலியல் தொழில் வல்லுநர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்)" எனும் சட்டமூலம் பற்றிய சட்டவாக்க நிலையியற் குழுவின் அறிக்கையையும் அதன் கூட்ட அறிக்கையையும் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

சட்டமூலம் சட்டவாக்க நிலையியற் குழுவினால் அறிக்கையிடப்பட்டவாறு 2020 பெப்ரவரி 19 ஆம் திகதி புதன்கிழமை பரிசீலிக்கப்படுமாக.

(2) அரசாங்கக் கணக்குக் குழுவின் தவிசாளர் கௌரவ லசந்த அழகியவன்ன எட்டாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடரிற்கான அரசாங்கக் கணக்குக் குழுவின் அரச நிறுவனங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூரதிகார சபைகளின் நிதிக் கட்டுப்பாடு மற்றும் செயலாற்றுகை பற்றி கணனி தகவல் முகாமைத்துவ முறைமையின் மூலம் மதிப்பீடு செய்தல் – 2018 நிதியாண்டு தொடர்பான முதலாவது அறிக்கை மற்றும் எட்டாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடருக்கான அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் இரண்டாவது அறிக்கை (2019.02.20 முதல் 2019.11.07 வரை) ஆகியவற்றை பற்றிய அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(3) அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி, எட்டாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடருக்கான அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் முதலாவது அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(4) வலுச்சக்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ சந்திம கமகே சார்பாக அக்குழுவின் உறுப்பினர் கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட —

(i) 2015 ஆம் ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை;

(ii) 2017 ஆம் ஆண்டுக்கான மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை;

(iii) 2016 ஆம் ஆண்டுக்கான இலங்கை மின்சார சபையின் வருடாந்த அறிக்கை;

(iv) 2016 ஆம் ஆண்டுக்கான இலங்கை அணு சக்தி சபையின் வருடாந்த அறிக்கை;

(v) 2017 ஆம் ஆண்டுக்கான இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் வருடாந்த அறிக்கை; மற்றும்

(vi) 2015 ஆம் ஆண்டுக்கான இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(5) சுகாதாரம் மற்றும் மனித சேமநலம், சமூக வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ மயில்வாகனம் திலகராஜா சார்பாக அக்குழுவின் உறுப்பினர் கௌரவ துலீப் விஜேசேகர அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட,

"2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்" தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(6) சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ மயந்த திசாநாயக்க அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட —

(i) 2013 - 2017 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை சம்மேளனப் பணியகத்தின் வருடாந்த அறிக்கைகள்;

(ii) 2016 ஆம் ஆண்டுக்கான சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை ;

(iii) 2016 ஆம் ஆண்டுக்கான சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் வருடாந்த அறிக்கை;

(iv) 2018 ஆம் ஆண்டுக்கான சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை மற்றும் கணக்குகள்;

(v) 2016 ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(vi) 2017 ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(7) பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ ஹர்ஷன ராஜகருணா அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட —

(i) 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழான கட்டளை;

(ii) 2013 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கைகள்;

(iii) 2018 ஆம் ஆண்டுக்கான தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை;

(iv) 2018 ஆம் ஆண்டுக்கான தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை;

(v) 2016 மற்றும் 2017 ஆண்டுகளுக்கான வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கைகள்;

(vi) 2018 ஆம் ஆண்டுக்கான மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை;

(vii) 2018 ஆம் ஆண்டுக்கான அரச தொழில்முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சின் செயலாற்றுகை அறிக்கை;

(viii) 2018 ஆம் ஆண்டுக்கான பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பொது வழங்கல் அமைச்சின் செயலாற்றுகை அறிக்கை;

(ix) 2018 ஆம் ஆண்டுக்கான உணவு ஆணையாளர் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை;

(x) 2016 ஆம் ஆண்டுக்கான சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் ஆண்டறிக்கை;

(xi) 2017 ஆம் ஆண்டுக்கான இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையையும் கணக்குகளும்;

(xii) 2017 ஆம் ஆண்டுக்கான இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் ஆண்டறிக்கை;

(xiii) 2017 ஆம் ஆண்டுக்கான ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிச் சபையின் ஆண்டறிக்கை; மற்றும்

(xiv) 2017/18 ஆம் ஆண்டுக்கான சிறிலங்கன் எயார்லையின்ஸின் ஆண்டறிக்கை

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(8) பெண்கள் மற்றும் பால்நிலை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன, அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட —

(i) 2015 ஆம் ஆண்டுக்கான தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் ஆண்டறிக்கை; மற்றும்

(ii) 2018 ஆம் ஆண்டுக்கான நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை ;

என்பவை தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(9) பெண்கள் மற்றும் பால்நிலை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன, அக்குழுவினால் தொகுக்கப்பட்ட, "குடும்பச் சட்ட சீர்திருத்தங்கள்" தொடர்பிலான அறிக்கையை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. பாராளுமன்ற அமர்வுகள் :** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 6.30 மணி வரை இருக்குமாக. பி.ப. 2.00 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 6.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**5. சட்டமூலம் கொண்டுவர அனுமதி :** கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ வழிமொழிய கௌரவ அசோக்க பிரியந்த சமர்ப்பித்த சட்டமூலம்,— " தெதிகம ஸ்ரீ மைத்திரீ பிரக்ஞார்த்த பௌத்த கல்வி தஹம் சபாவவைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 52 (6 ) இன் கீழ் அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**6. தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1 ):** மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 3(ஓ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 142 ஆம் பிரிவின் கீழ் மருத்துவகப் பரீட்சிப்புகள் தொடர்பில் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஒக்டோபர் 14 ஆம் திகதிய 2145/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2020.02.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**7. தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2 ):** மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 118 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 142 ஆம் பிரிவின் கீழ் விலையிடல் தொடர்பில் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஒக்டோபர் 21 ஆம் திகதிய 2146/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2020.02.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**8. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை :** கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சர் மற்றும் சுற்றுலா மற்றும் விமானச் சேவைகள் அமைச்சர் சார்பாக வெளிநாட்டு உறவுகள் அமைச்சர், திறன்கள் அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 (2) ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஒக்டோபர் 02 ஆம் திகதிய 2143/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2020.02.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**9. களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட்டின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2015/2016) :** பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி விவசாய அமைச்சர் சார்பாக வெளிநாட்டு உறவுகள் அமைச்சர், திறன்கள் அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2018.08.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.03.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட்டின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**10. தேசிய பெருந்தோட்டக் கைத்தொழில் முகாமைத்துவ நிறுவனத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2016):** பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி விவசாய அமைச்சர் சார்பாக வெளிநாட்டு உறவுகள் அமைச்சர், திறன்கள் அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1979 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, தேசிய பெருந்தோட்டக் கைத்தொழில் முகாமைத்துவச் சட்டத்தின் 23 பிரிவின் கீழ், 2018.08.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான தேசிய பெருந்தோட்டக் கைத்தொழில் முகாமைத்துவ நிறுவனத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**11. தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2015) :** பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி விவசாய அமைச்சர் சார்பாக வெளிநாட்டு உறவுகள் அமைச்சர், திறன்கள் அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II பகுதியின் 14-1A ஆம் பிரிவிற்கமைய, 2018.05.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**12. தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2016):** பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி விவசாய அமைச்சர் சார்பாக வெளிநாட்டு உறவுகள் அமைச்சர், திறன்கள் அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II பகுதியின் 14-1A ஆம் பிரிவிற்கமைய, 2018.09.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**13. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2016) :** கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு மேம்பாடு அமைச்சர் மற்றும் சுற்றுலா மற்றும் விமானச் சேவைகள் அமைச்சர் சார்பாக வெளிநாட்டு உறவுகள் அமைச்சர், திறன்கள் அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் பிரகாரம், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II ஆம் பிரிவிற்கமைய, 2019.06.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது

**14. இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2015):** வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர் சார்பாக வெளிநாட்டு உறவுகள் அமைச்சர், திறன்கள் அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை, — 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமைய, 2018.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது

**15. இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2016):** வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர் சார்பாக வெளிநாட்டு உறவுகள் அமைச்சர், திறன்கள் அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமைய, 2018.07.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது

**16. இலங்கை கமத்தொழில் ஆய்வுக் கொள்கைக்கான சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2016) :** மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சார்பாக வெளிநாட்டு உறவுகள் அமைச்சர், திறன்கள் அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C ) ஆம் பிரிவிற்கமைய, 2018.06.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை கமத்தொழில் ஆய்வுக் கொள்கைக்கான சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது

**17. இலங்கை பொஸ்பேட்டு லிமிடட்டின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2016/2017):** மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சார்பாக வெளிநாட்டு உறவுகள் அமைச்சர், திறன்கள் அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 2003 யூன் 02 ஆம் திகதிய அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை இல. PED 12, அத்தியாயம் 6.5.3 இன் பிரகாரம், 2018.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2017.03.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான வரையறுக்கப்பட்ட இலங்கை பொஸ்பேட்டு லிமிடட்டின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**18. அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2015):** மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சார்பாக வெளிநாட்டு உறவுகள் அமைச்சர், திறன்கள் அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க அரச விவசாயக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 2 ஆம் பிரிவிற்கமைய, 2018.08.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது

**19. நெல் சந்தைப்படுத்தும் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2013):** மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சார்பாக வெளிநாட்டு உறவுகள் அமைச்சர், திறன்கள் அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவிற்கமைய, 2018.09.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, நெல் சந்தைப்படுத்தும் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது

**20. கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2016) :** மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சார்பாக வெளிநாட்டு உறவுகள் அமைச்சர், திறன்கள் அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1999 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சட்டத்தின் 27 ஆம் பிரிவிற்கமைய, 2018.09.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது

**21. ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2016) :** மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சார்பாக வெளிநாட்டு உறவுகள் அமைச்சர், திறன்கள் அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C ) ஆம் பிரிவிற்கமைய, 2018.10.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது

**22. நெல் சந்தைப்படுத்தும் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2014):** மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சார்பாக வெளிநாட்டு உறவுகள் அமைச்சர், திறன்கள் அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவிற்கமைய, 2019.05.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, நெல் சந்தைப்படுத்தும் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது

**23. தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2015) :** போக்குவரத்துச் சேவைகள் முகாமைத்துவ அமைச்சர் மற்றும் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் சார்பாக வெளிநாட்டு உறவுகள் அமைச்சர், திறன்கள் அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C ) ஆம் பிரிவிற்கமைய, 2018.07.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது

**24. இலங்கை சிவில் விமானச்சேவைகள் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2015):** கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு மேம்பாடு அமைச்சர் மற்றும் சுற்றுலா மற்றும் விமானச் சேவைகள் அமைச்சர் சார்பாக வெளிநாட்டு உறவுகள் அமைச்சர், திறன்கள் அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2017.11.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை சிவில் விமானச்சேவைகள் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது

**25. இலங்கை சிவில் விமானச்சேவைகள் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2016):** கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு மேம்பாடு அமைச்சர் மற்றும் சுற்றுலா மற்றும் விமானச் சேவைகள் அமைச்சர் சார்பாக வெளிநாட்டு உறவுகள் அமைச்சர், திறன்கள் அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2018.10.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை சிவில் விமானச்சேவைகள் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது

**26. இலங்கை போக்குவரத்துச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2014) :** போக்குவரத்துச் சேவைகள் முகாமைத்துவ அமைச்சர் மற்றும் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் சார்பாக வெளிநாட்டு உறவுகள் அமைச்சர், திறன்கள் அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2018.10.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை சிவில் விமானச்சேவைகள் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது

(பி.ப 3.03 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

**27. ஒத்திவைப்பு (பிணைமுறி விநியோகம் பற்றிய தடயவியல் கணக்காய்வறிக்கைகள்):** “இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக” என பாராளுமன்ற சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

“கௌரவ தேனுக விதானகமகே தலைமை தாங்குவாராக” என அபிவிருத்தி வங்கிகள் மற்றும் கடன் திட்டங்கள் இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப 4.00 மணிக்கு கௌரவ தேனுக விதானகமகே தலைமை தாங்கினார்.)

“கௌரவ க. துரைரெட்ணசிங்கம் தலைமை தாங்குவாராக” என சமுதாய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப 5.00 மணிக்கு கௌரவ க. துரைரெட்ணசிங்கம் தலைமை தாங்கினார்.)

அப்போது நேரம் பி.ப. 6.30 மணியாகிவிடவே தலைமைதாங்கும் உறுப்பினர் வினாவின்றிப் பாராளுமன்றத்தை ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம், 2020 பெப்ரவரி 19 ஆம் திகதி புதன்கிழமை பி. ப. 1.00 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.